DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 84/2025**

**Deposition of LW1 examined as PW1** (புகார்தாரர்) Dt. 07.04.2026

| | |
|---|---|
| Name | மணிகண்டன் |
| Father's Name | குருசாமி |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | சீர்காழி |
| Age | 48/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 07.04.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கோவில் சுதை வேலை மற்றும் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு மாதம் நினைவில் இல்லை 15 ம் தேதி வெளியூர் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு வந்தேன். அன்று மாலை என் வயலுக்கு சென்ற போது பக்கத்து வயல்காரரான எதிரி என் வயலின் வரப்பை வெட்டி அவர் வயல் பக்கம் சேர்த்து இருந்தார். அதை கேட்டு சத்தம் போட்டுவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டு பிறகு கடை தெருவுக்கு சென்றுவிட்டு சுமார் 8.00 மணியளவில் வீட்டிற்கு செம்பதனிருப்பு பிள்ளையார் கோவில் தெரு முனையில் வந்த போது கருணாநிதி என்னை குச்சிக்காரி மகனே, தேவிடியா மகனே என திட்டி நான் அப்படித்தான் அண்டைகளிப்பேன் என திட்டி கட்டை கழியை எடுத்து கையில் அடித்தார் அதில் எனக்கு இடது கை சுண்டு விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே தள்ளிவிட்டார். நெஞ்சில் மிதித்தார். அங்கு வந்த கலியமூர்த்தி, செந்தில்குமார் ஆகியோர்கள் விலக்கிவிட்டார்கள். பிறகு எனது மகன் ரகுராமன் என்னை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தார். நான் சிகிச்சையில் இருந்த போது பாகசாலை காவல், துறையினர் வந்து புகார் வாக்குமூலம் பெற்றனர். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் உள்நோயாளியாக 10 நாட்கள் வரை சிகிச்சையில் இருந்தேன்.

7/4/26

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எத்தனை வருடங்களாக சுதை வேலை செய்கிறேன் என்றால் கடந்த 28 வருடங்களாக சுதை வேலை செய்து வருகிறேன். வெளியூருக்கு வேலைக்கு செல்வேனா என்றால் வேலைக்கு செல்வேன். அவ்வாறு செல்லும் பொழுது எத்தனை நாட்கள் தங்கி வேலை செய்வேன் என்றால் 15 நாட்கள் முதல் ஒரு மாதம் வரை தங்கி வேலை செய்வேன். விவசாய வேலை யார் பார்க்கிறார் என்றால், நானும் பார்ப்பேன் என் மனைவியும் பார்ப்பார். நான் வெளியூர் செல்லும் சமயத்தில் என் மனைவி விவசாய வேலை பார்ப்பார் என்றாலும், நான் உள்ளூரில் இருக்கும் போது நான் விவசாய வேலை பார்ப்பேன் என்றாலும் சரிதான். பொதுவாக வெளியூருக்கு சென்றுவிட்டு எத்தனை மணிக்கு ஊருக்கு வருவேன் என்றால் அது நான் கிளம்பும் நேரத்தை பொறுத்து உள்ளது. இரவு நேரங்களில் வருவேனா என்றால் பொதுவாக இரவில் ஏறி மறுநாள் காலையில்தான் வீட்டிற்கு வருவேன். எங்கள் ஊரில் மாலை நேரங்களில் தெரு பகுதிகளில் கூட்டம் பொதுவாக இருக்காது என்றால் மக்கள் இருப்பார்கள். வரப்பு பிரச்சனை நடந்ததாக கூறப்படும் இடத்தை எப்போது நான் வாங்கினேன் என்றால் சுமார் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்பு என் அண்ணனிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன். சம்பவம் எந்த ஆண்டு நடைபெற்றது என்றால் 2023 ஆம் ஆண்டு நடைபெற்றது மாதம் சரியாக நினைவில்லை 15 ஆம் தேதி நடைபெற்றது. அன்று என்ன கிழமை என்றால் நினைவில்லை. நான் வயலுக்கு சென்றதாக சொல்லி உள்ளேன். அது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 4 அல்லது 5 மணி இருக்கும். ஐந்து மணிக்கு பிறகு வீட்டிற்கு சென்று விட்டு வெளியில் சென்றேனா என்றால் இரவுதான் கடை தெருவிற்கு சென்றேன். எதிரியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் பக்கத்து தெருதான். எதிரி என் வீட்டின் வழியாக தான் கடை தெருவிற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். என் வீட்டிற்கும், கடை தெருவிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சிறிய தூரம்தான் ஐந்து நிமிடத்தில் சென்றுவிடலாம். நடந்து செல்லலாமா என்றால் செல்லலாம். சம்பவம் நடந்ததாக கூறும் இடத்தில் சுமார் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 10 நபர்கள் இருந்தார்கள். எதிரி என்னை அடிக்கவில்லை என்றாலும் அவர் மீது இருந்த விரோதத்தின் காரணமாக அவர் அடித்துவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் யாரும் இல்லை என்றாலும் பத்து நபர்கள் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, தெரியினை முன்னிலையில் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

7/4/24

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை